Registered as a Newspaper

பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 26 (10-01-1994) திங்கட்கிழமை ஓசை 326

பொதுசன நூலகம் மாநகராட்சி 10-1-1994

## மலேரியா நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு

பிளாஸ்மோடியம் பல்சிபாரம் எனும் ஒட்டுண்ணி ஏற்படுத்தும் மலேரியா நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் வெளிக்கள பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளது. அவுஸ்திரேலியா மெல்போன் நகரில் உள்ள வைத்திய ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் சேர் நூசால் இதுகுறித்து அறிவித்துள்ளார். ஆண்டுதோறும் உலகம் முழுவதும் இறக்கும் 20லட்சம் குழந்தைகளைக்காக்க இத் தடுப்பு மருந்து உதவும் என பேராசிரியர் கூறியுள்ளார். இத் தடுப்பு மருந்து பல்வேறு நுண்ணுயிர் கொல்லிகளால் ஆனது. மலேரியா ஒட்டுண்ணி ஒட்டியிருக்கும் குருதியின் வெண் (3ஆம் பக்கம் பார்க்க)

### காயமடைந்தவர் மரணம்

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தில் சிறிலங்கா விமானப்படையினர் நடத்திய ''சுப்பர்சொனிக்'' விமானத்தாக்குதலில் படுகாயமடைந்து யாழ். அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சைக்குட்பட்டிருந்த மற்றொருவர் நேற்று மரணமடைந்தார்.

மண்டைதீவு இராணுவ முற்றுகையால் இடம் பெயர் (3ஆம் பக்கம் பார்க்க)

# கட்சிக் கட்டுப்பாட்டை மீறியோர் கிளர்ச்சியாளர் அல்ல துரோகிகள்!

## போராட்டத்தை ஒடுக்க இந்தியாவிடம் பாடம் கேட்கவேண்டும்

### முன்னாள் இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம் பெறும் இராணுவ தாக்குதல் நடவடிக்கையில் இரு விடயங்கள் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளன ஒன்று யுத்தம்; இரண்டாவது, வெற்றி.

இவ்வாறு தென்மாகாணத்திற்குரிய முன்னாள் இராணுவ அதிகாரி பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் 'வடக்கு-கிழக்கு பிரச்சினையின் பிரதிபலிப்புகள்' என்ற தொடர் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கட்டுரையில் மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

இந்தியாவைப் பொறுத்த மட்டில், அது பல பிரிவினைவாத பிரச்சினைகளைச் சந்தித்துள்ளது அந்தப் பிரிவினைவாத கிளர்ச்சிகளை இந்தியா அடக்கியும் உள்ளது.

ஆனால், எம்மைப் பொறுத்தவரையில் எமக்கு ஒரேயொரு பிரிவினைவாதப் பிரச்சினை மாத்திரமே உள்ளது. இருந்தும் எம்மால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இது ஏன் என்று என்னால் புரிந்துகொள்ள முடியும்.

உண்மையிலேயே இந்தியாவில் தோன்றிய ஆயுதக் கிளர்ச்சிகளையும் அவற்றை எவ்வாறு இந்தியா சமாளித்தது என்பதுபற்றியும் எங்கள் இராணுவப் பாடசாலைகளில் போதிக்க வேண்டும். அவர்களிடமிருந்து நாம் நிறைய கற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

தவறாக விளங்கிக்கொள்ளப்பட்டஒரு விடயம் வெற்றி என்பது. இராணுவரீதியாகப் பார்க்கப்போனால் இரண்டு பிரதான அம்சங்கள் கொண்டதுதான் இந்த வெற்றியாகும்.

ஒன்று மண்ணைக் கைப்பற்றுவது, இரண்டாவது கைப்பற்றிய மண்ணை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வது.

கிளாலிப் பகுதியைஇராணுவம் கைப்பற்றியபோதும் (4ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் மகாநாட்டில் தொண்டா சாடல்

(கொழும்பு)

**மத்திய மாகாண சபையில் தனது பணிப்புரையை ஏற்று, ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கு எதிராக வாக்களிக்கத் தவறிய மாகாணசபை உறுப்பினர்களைத் துரோகிகள் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தலைவரான தொண்டமானும், அதன் செயலாளர் செல்லச்சாமியும் கூட்டாகக் கூட்டிய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு குற்றம் சாட்டினார். அப்பொழுது சர்ச்சைக்குரிய ஆறு மாகாணசபை உறுப்பினர்களும் அங்கிருந்தனர்.**

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற இச்செய்தியாளர் மாநாட்டில் அதிக எண்ணிக்கையான செய்தியாளர்கலந்து கொண்டதோடு, காரசாரமான வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர். இம் மாநாட்டில், அமைச்சர் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி உட்பட சர்ச்சைக்குரிய ஆறு மாகாணசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மத்திய மாகாண சபையின் தமிழ்க் கல்வி, கைத்தொழில் முகாமைத்துவ அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள கதிரேசன் பற்றி அச் செய்தியாளர் மாநாட்டில் சூடான வாக்குவாதம் நிகழ்ந்தது.

மத்திய மாகாண சபையின் சர்ச்சைக்குரிய உறுப்பினர்களும் தமக்கு இதுபற்றித் தெரியாது எனத் தெரிவித்தனர்.

செய்தியாளர்கள், கதிரேசன் கிளர்ச்சிவாதிக்குள் ஒரு கிளர்ச்சி வாதியா? எனக் கேட்ட போது,

சட்டென்று, திரு தொண்டமான், 'துரோகிகளுக்குள் ஒரு துரோகி' எனச் சொன்னார்,

சமீபத்தில் கூட்டப்பட்ட தேசிய சபை நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு செயல் என்று செல்லச்சாமி நிருபர்களைப் பார்த்துக் கூறியபோது, தேசிய சபையின தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று தொண்டமான் குறிப்பிட்டார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### எட்டு மாகாணசபை உறுப்பினர் மீது

## நடவடிக்கை எடுத்தால் சமாதான சூழல் கெடும்!

### தொண்டாவிற்கு செல்லச்சாமி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான தொண்டமானுக்கும் பொதுச்செயலா

தைய நிலையில் செல்லச்சாமி கட்சித்தலைவர் தொண்டமானுக்கு மீண்டும்ஒரு மிரட்டல் விடுத்துள்ளார்.

மத்திய மாகாணசபையின்

நிலைப்பாட்டில் இருந்து தொண்டமான் விட்டுக்கொடுக்கத்தவறினால் இ. தொ. காவினுடைய சமாதான சூழல் ஏற்படக்கூடிய எந்த வாய்ப்

## உதவி கேட்டு அழும் தோற்றத்தில் குழந்தையொன்றின் எலும்புக்கூடு

# குழந்தையொன்றின் எலும்புக்கூடு

## சூரியகந்தவில் மீட்பு

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பகுதியில் பல எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழியை தோண்டிக்கொண்டிருந்தவர்களுக்கும் அங்கு நின்றவர்களுக்கும் புதைகுழியில் குழந்தை ஒன்றின் எலும்புக்கூடு கிடந்தவிதம் பெரும் அதிர்ச்சியை தந்ததாக பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

திறந்த தாடையுடன் நீட்டிய கைகளுடன் உதவிகேட்டு அழுவதுபோன்ற தோற்றத்தில்ஒருகுழந்தையின்எலும்புக்கூடு காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சூரியகந்த பகுதியில் தொடர்ந்து மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு வருவதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

மண்டைஓடுகள், எலும்புகள், சதையுடன் கூடிய எலும்புகள், இரத்தக்கறைபடிந்த துணிகளால் சுற்றப்பட்ட எலும்புகள் என மனித எலும்புக்கூடுகள் மேகக் கூட்டத்தில் மறைந்துசெல்லும் பசும்மலை ஒன்றினருகே மீட்கப்படுவது சிறிலங்காவின் துன்பமயமான கடந்தகால வரலாற்றை மெல்ல மெல்ல அம்பலமாக்கிவருவதாகவும் பி பி. ஸி செய்தியாளர் கூறுகிறார்.

# மேலும் ஒரு மனித புதைகுழி சூரியகந்தவில் கண்டுபிடிப்பு

## பெற்றோர் பார்வையிட அனுமதி மறுப்பு

(கொழும்பு)

சூரியகந்த பகுதியில்மேலும் புதைகுழி ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 13 பேரின் எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இப் பகுதியில் நேற்று காலை 9.00 மணி முதல் 4.00 மணிவரை இத்தோண்டும் பணி நடைபெற்றது. நேற்று அதிகாலை முதல் சூரியகந்த மலையில் ஏறுவதற்கு காணாமல் போனவர்களின் பெற்றோரும் பொது மக்களும் அப்பகுதியில் பெருமளவில் குழுமினர் எனினும் புதைகுழிகள் இருந்த மலைப்பகுதிக்கு அவர்கள் செல்ல பொலிசார் தடைவிதித்து விட்டனர்.

கடந்த வெள்ளிக் கிழமை. எம்பிலிப்பிட்டிய நீதிபதி விடுத்த வேண்டுகோளில் அப்பகுதிக்குச் சென்று கண்டெடுக்கப்படும் எலும்புக்கூடுகளை அடையாளம் காண உதவுமாறு கோரியிருந்ததை அடுத்தே பொதுமக்கள் அங்கு குழுமி நின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சூரியகந்த மலைக்கு பொது மக்கள் செல்வதைத் தடுப்பதற்காக 300க்கும் மேற்பட்ட ஆயுதம்தரித்த பொலிசார் அங்கு நிறுத்தப்பட்டிருந்தனர். மேலும் அம் மலை உச்சியில் கண்ணீர்ப் புகைக்குண்டுகள், மற்றும் நவீன ஆயுதங்கள் தரித்த பொலிசாரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

மலைப்பகுதிக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களும், சட்டத்தரணிகளும் மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்டனர். பத்திரிகையாளர்செல்ல சப்பிரகமுவ பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மயானத்தில் எடுத்தஎலும்பு வீதியில் வீசப்பட்டதாம்

## அரச சார்பு பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் காவத்தையிலுள்ள மயானமொன்றிலுள்ள புதைகுழிகளைத் தோண்டி அங்குள்ள எலும்புக் கூடுகளை வீதியில் வீசியிருப்பதாக அரசசார்பு 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை பிரதான செய்தியாக வெளியிட்டுள்ளது.

காவத்தையிலுள்ள மயானமொன்றில் சில விசமிகள் புதைகுழிகளைத் தோண்டி எலும்புக் கூடுகளை அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும்நோக்கத்துடன் தெருவில் வீசியிருப்பதாக அது செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு தேர்தல் காலத்தில் நெருக்கடி கொடுக்கும் நோக்கத்துடன் எதிர்க் கட்சிகள் செய்த சதிமுயற்சியே இதுவெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சூரிய கந்தவில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பாக இப் பத்திரிகை செய்தி எதனையும் வெளியிடவில்லை.

---

மாநாட்டில் சூடான வாக்குவாதம் நிகழ்ந்தது.

மத்திய மாகாண சபையின் சர்ச்சைக்குரிய ஏழு பேரும் கிளர்ச்சியாளர்கள் என நிருபர்கள் குறிப்பிட்டபோது நாம் கிளர்ச்சியாளர்கள அல்ல. அப்படி எம்மை குறிப்பிட வேண்டாம் என்று மாநாட்டில்கலந்து கொண்ட ஆறு பேரும் தெரிவித்தனர்.

இதற்கு, கிளர்ச்சியாளர் என்றோ, துரோகி என்றோ சொல்லும் உரிமை எங்களுக்கு உண்டு. தேவையாயின் சட்டநடவடிக்கை எடுங்கள் என்று செய்தியாளர் தெரிவித்தனர்,

அமைச்சராக நியமிக்கப்பட்ட கதிரேசனின் நியமனம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று அமைச்சர் செல்லச்சாமி கூறியபோது, சர்ச்

காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான தொண்டமானுக்கும் பொதுச்செயலாளர் செல்லச்சாமிக்கும் இடையில் இருந்துவந்த பிணக்கு தொடர்பாக பேச்சுக்கள் நடைபெற்றுள்ள தற்போ

மிரட்டல் விடுத்துள்ளார்.

மத்திய மாகாணசபையின் சர்ச்சைக்குரிய எட்டு உறுப்பினர்களும் இராஜினாமா செய்யவேண்டும் என்ற

காவினுள் சமாதான சூழல் ஏற்படக்கூடிய எந்த வாய்ப்பும் இல்லை என செல்லச்சாமி மிரட்டியுள்ளதாக அரச சார்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

---

# இன்று படகுச்சேவை

கிளாலி- பூநகரி படகுச் சேவை வாரம்தோறும் திங்கள், செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் கிரமமாக வழமையான நேரத்திற்கு நடைபெறும் இதன்படி இன்று படகுச்சேவை நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

---

# கப்பலில் சடலம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்கு துறைக்கு இன்றுகாலை வந்துசேர்ந்த 'மாகோ' கப்பலில் பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் ஒன்று வந்து சேர்ந்தது.

வட்டுக்கோட்டை சித்தன் கேணியைச் சேர்ந்த மார்க் கண்டு தம்பிராசா என்ற பொலிஸ் சார்ஜனின் சடலமே எடுந்து வரப்பட்டது,

(யோ)

---

# மக்களின் நன்மை கருதி கட்சி கொள்கையை கைவிடேன்!

(கொழும்பு)

''மக்களின் நன்மை கருதி இலங்கை தொழிலாளர் காங்கிரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நான் ஒருபோதும் பின்நிற்கப்போவதில்லை'' இவ்வாறு இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார். இ. தொ. காவின் ஹற்றன் மாநிலக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போதுஇவ்வாறுதெரிவித்தார்

நான் கடந்த 50வருடங்களாக தொழிற்சங்கத்துறையில் கடமையாற்றி வருகின்றேன். கடந்த 20வருடங்களாக அரசியலில் மிக நெருங்கிய தொடர்புகளைக்கொண்டிருக்கின்றேன். ஆனால் கடந்த இரண்டு மூன்று மாதங்களாக எனக்கு கிடைத்திருக்கும் விளம்பரங்கள் அதிகம் அதில் நன்மைகளும் உண்டு. தீமைகளும் உண்டு. மத்திய மாகாணசபையின் முதலமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்டநம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்காது எதிர்த்த இ தொ. கா. சார்பான எட்டுப்பேரின்பிரச்சினை தொடர்பாக தேசிய சபை என்ன தீர்மானம் எடுத்தாலும் அதை நான் மாற்றமாட்டேன் பொதுச் செயலாளருடன் சமரசப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட போது அவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

---

# மாங்குளம் காவல்துறை பணிமனை நேற்று திறப்பு

தமிழீழ காவல்துறையின் மாங்குளம் பிரதேசத்திற்கான காவல் பணிமனை நேற்றுக்காலை 7 15 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இக் காவல் பணிமனை திறப்பு விழா நிகழ்சியின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி திரு, ரவி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைக்க, தமிழீழ காவல்துறைக்கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அவர்கள் ஏற்றி வைத்தார். இந் நிகழ்ச்சியைத்தொடர்ந்து மங்கள விளக்கை தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் திரு பரா அவர்கள் ஏற்றி வைத்தார், சிறப்புத் தளபதி திரு ரவி அவர்கள் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டி பணிமனையைத் திறந்து வைத்தார்.

அடுத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்கட்கும், பொதுமக்களுக்கும் இரண்டு நிமிடம் அஞ்சலியும், வணக்கமும் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன் தியாகம் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. இப் பணிமனைத் திறப்பு விழா நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள், பொதுமக்கள ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இக் காவல் பணிமனையில் மாங்

(4ஆம் பக்கம் பார்க்க)

---

# காஞ்சி பெரியார் மறைவு; இந்து இளைஞர் செய்தி

(யாழ்ப்பாணம்)

நடமாடும் தெய்வமாகவும் ஆதிசங்கரரின் மறு அவதாரமாகவும் கோடிக்கணக்கான இந்துக்களாலும் ஏனையோராலும் வழிபடப்பெற்று வரும்காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் தமது நூற்றாண்டுகால இன்றபணியை நிறைவுசெய்து நேற்று முன்தினம் சமாதி நிலையை அடைந்துள்ளமையையிட்டு இந்து இளைஞர் மன்றங்கள், இந்து தொண்டர் அமைப்புகள், இந்துமன்றங்கள் சார்பில் எமது ஆழ்ந்த வேதனையையும் இரங்கலையும் தெரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மூக்குக்கண்ணாடி

எவருடைய கமிஷன் அடிப்படை சிபார்சும் இல்லாமல் டாக்டர்களின் மருந்துச் சிட்டைக்கு அமைய உங்கள் கண்களுக்கும் - முகங்களுக்கும் ஏற்ற மூக்குக் கண்ணாடிகளை தாமதம் எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ள நாடுங்கள்: மொறாயஸ் 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8274)

### உணவு சேவை யாழ்நகர்

மதிய உணவு - மீன், இறைச்சி, மரக்கறி (11. 30. 2. 00) சூப்வகை - மரக்கறி மாமிசம் விசேஷ உணவு - புரியாணி, நூடில்ஸ், பிறைட்றையிஸ் பரிமாறும் சேவை வழங்கப்படும் ஓடர்களுக்கு நாட வேண்டிய முகவரி ''காருண்ணியா சையினிஸ் ஹொட்டேல்'' 166B, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(7168)

### வெற்றுப் போத்தல் கொள்வனவு

அவசர தேவைக்காக (முழு அளவு) வெற்றுப் போத்தல்கள் உடன் தேவை. நியாய விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: ரி. ஆர் ஆர் ஓ. லிமிட்டெட் 106, 4-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

(சி-8314)

### பிற்போடப்பட்டது

பனை அபிவிருத்திச்சபை சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர் பதவிக்காக இன்று நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக சபையின் பதில் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

### இலவச வகுப்புகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் திருநெல்வேலி கந்தன் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் 1994 ஆம் கல்வி ஆண்டிற்கான இலவச கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி வீதிபாற்பண்ணைக்கு அருகாமையில் இயங்கி வரும் மேற்படி கல்வி வளர்ச்சிக்கழகத்தில் பகல் நேரக் கல்வி வகுப்புக்களும், பெற்றோமாக்ஸ் வெளிச்ச வசதியுடன் இரவு நேர மீட்டல் வகுப்புக்களும்(சுயகல்வி) நடைபெற்று வருகின்றன. இவ் இலவச வகுப்புக்களில் அநேக மாணவர்கள் பங்கு பற்றி பயனடைந்து வருகின்

## துப்பாக்கிகளுக்கு தட்டுப்பாடு

### என்கிறது பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

துப்பாக்கிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது இதனைத் தொடர்ந்து அமைச்சர்கள் மற்றும்பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக துப்பாக்கிகள் வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும், சிறிலங்காவின் பாதுகாப்பு படைகளுக்கு கூட துப்பாக்கிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

ஈழநாதம்

## 4-ம் ஆண்டு நிறைவு

### மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

ஈழநாதம் மக்கள் தினசரி தனது நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

தலைப்பு:

**"போராட்டத்திற்கான சிந்தனையை இன்றைய கல்வி ஊட்டுகிறதா?"**

போட்டி விதிகள்:

- கட்டுரைகள் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர் முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும், அக்கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1994 ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- போட்டி முடிவுகள் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.
- இப்போட்டியில் முதலாவது பரிசுபெறும் கட்டுரை நான்காவது ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப்படும்.
- முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு நான்காவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப் போட்டி' என கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு,

ஆசிரியர்
ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்,

என்ற முகவரியிட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

## நன்றி தெரிவிக்கின்றோம்

எமது குடும்பத்தலைவர் சிவநெறிச்செம்மல் ச. நமசிவாயம் அவர்கள் 30-12-93இல் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அனுதாபம் தெரிவித்தும் அன்னாரது உடல் நிலை தேற வேண்டுமென சிகிச்சையளித்த டாக்டர்கள், ஊழியர்கள், பலவழிகளிலும் ஒத்துழைத்து உதவி புரிந்தவர்கட்கும் கடந்த 6.1.94இல் அன்னார் இறைபதம் அடைந்த பொழுது அவர்களது இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்ட சகல மக்களுக்கும் அனுதாபம் தெரிவித்து அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட சகல பொது நிறுவனங்கட்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பிய பாடசாலைகள், பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்த நிறுவனங்கள், மேற்படி வைபவத்தில் சரீர உதவிகள் செய்த மக்கள், அஞ்சலி உரையாற்றியோர்க்கும் அன்னாரது இறுதி ஊர்வலம் சிறப்புற நடைபெற பலவழிகளிலும் உதவி புரிந்த சகல தரப்பு பொது நிறுவனங்கட்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர்க்கும் எமது குடும்பத்தின் சார்பில் மிகுந்த கடமைப்பாட்டுடன் நன்றி தெரிவிக்கின்றோம்.

அம்பிகா டிஸ்பென்சரி
சாவகச்சேரி. (7183)

குடும்பத்தினர்.
சரசாலை.

## 61-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 28-06-1969

வீரச்சாவு: 11-11-1993

11-11-93 பூநகரி கூட்டுப்படைதளம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த;

### 2-ம் லெப். செந்தமிழ்ச்செல்வன் (கேதீஸ்)

**(கந்தையா கேதீஸ்வரன்)**

(நகுலேஸ்வரா வீதி, கீரிமலை)

செந்தமிழர் துயர் துடைக்க
வீறு கொண்டு ... விடுதலை வேங்கையென
செருக்களத்தில் ... சிங்களப் படையுடன்
போர் புரிந்து ... வீரச்சாவடைந்த
செந்தமிழ் செல்வனே! ......
... தமிழன்பால் பற்றுடன் ......
... நீ சென்றாய் ......
... உனை ஈன்றவரும் ... உன்னோடு
உடன் பிறந்தோரும் ... உனைப்
பெற்ற தமிழ்க்குலமும் ... உனைப்
பிரிந்து வாடுதையா! ........

இன்று (10-01-94) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்

## ஓராண்டு நீங்காத நினைவலைகள்



தோற்றம்: 01-05-1927

மறைவு: 22-12-1992

திதி: 10 01-1994 (இன்று)

திருமதி

### வேலுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை

ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் உங்கள் பாசம்
எங்கள் நெஞ்சங்களை விட்டகலாதம்மா

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மக்கள்: வே. கணேஸ், வே. செல்வராசா, வே. தில்லைநடராசா, ஆ. சிவபாக்கியம், வி நவமணி, தி செல்வமலர், மருமக்கள், சகோதரர், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

துளாய்ப்பிள்ளையார் வீதி,
அல்வாய் வடமேற்கு,
திக்கம், அல்வாய். (சி-8324)

## நினைவு கூருகின்றோம்

### 1994-01-10

1974ஆம் ஆண்டு இதே தினத்தில், யாழ்ப்பாணத்தில்நிகழ்ந்தநான்காவதுஉலகத்தமிழாராய்ச்சிமாநாட்டின் போது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களிற் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்

1986ஆம் ஆண்டு யாழ்-தொண்டமானாற்றுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மகன்.

1991ஆம் ஆண்டு யாழ்-நெடுந்தீவுப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் மெடிசின் மாஸ்ரர்** (யோகநாதன் பிரதாபன்-2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையாழ்)

1992ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

துணைப்படைவீரர்-

**ரவி** (சுப்பிரமணியம் ரவீந்திரன் - கல்லுவம் கரணவாய் மேற்கு - யாழ்)

மட்டக்களப்பு - காக்காச்சிவெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். தீபன்-காஞ்சிலியன்** (வைத்திலிங்கம் தங்கவேல் - 35ஆம் கிராமம் - மட்டக்களப்பு)

**சிவராஜா** (அழகப்போல் சதானந்தசுந்தரம்- தாமரைக்கேணி -மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட

...ல் வகுப்புக்களும்(சுயகல்வி) நடைபெற்று வருகின்றன. இவ் இலவச வகுப்புக்களில் அநேக மாணவர்கள் பங்கு பற்றி பயனடைந்து வருகின்றனர். (41)

...மூநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்,

என்ற முகவரியிட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

## 2-ம் ஆண்டுநினைவஞ்சலி இரண்டாவது பிறந்ததினம்





கடற்புலியின் துணைப்படைவீரர்

ரவி

(சுப்பிரமணியம் ரவிந்திரன்)

பிறப்பு: 31-4-1968

வீரச்சாவு: 10-1-1992

சுப்பிரமணியம் ரவிந்திரன்

(ரவி)

மாண்டு போய் மீண்டும் மலர்ந்த மாவீரன் ரவி நீ கடலிலே
மடிந்து மீண்டும் ஒரு மறுபிறவி பிறந்து எங்களுடன்
இருக்கிறாய் என்பது உண்மை உன் பழைய உருவத்தை
நினைக்கும் போது கவலை ஆனால் உன் சிறு உருவத்தையும்
உன் பேச்சையும் கேட்கும் போது நீ மறு
பிறவி பிறந்து எங்களுடன் தான் இருக்கிறாய் என்பது
உண்மை. உன் வரலாறு பொன் எழுத்துக்களால்
பொறிக்கப்படும் என்பது உண்மை
நீ மடியவில்லையடா உன்கதை முடியவில்லையடா

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியிலும் இரண்டாவது பிறந்தநாள் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும் நண்பர்களையும் உறவினர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

ரவி குடும்பத்தினர்

கல்லுவம்,
சரணவாய் மேற்கு,
கரவெட்டி.

(7182)

இன்று (10-01-94) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
22/2, வெள்ளாந்தெரு,
மாவடி,
யாழ்ப்பாணம்.

(7176)

## 61-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



தாயின் மடியில்

28-12-.973

தாயக மண்ணில்

11-11.1993

### 2-ம் லெப். கருணா (அன்பு)

(கந்தையா தவராஜா)

பால் மணம் மாறாப் பாலகன் - நீ
பாவிகள் எமைப்பரிதவிக்க விட்டு
பார் மீட்கப் புறப்பட்டனையோ
வழி மேல் விழி வைத்து நீ
வருவாய் எனக் காத்திருக்க
வீறு கொண்டு எழுந்து நீ
தமிழ் மண்ணை மீட்டெடுக்க - எம்
இதய பூமியாம் பூநகரியில்
மாவீரனானாயோ.

உன் பிரிவால் துயருறும்,

ஈவினை தெற்கு,
கலியுகன் வீதி,
புன்னாலைக்கட்டுவன்.

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், நண்பர்கள்,
உற்றார், உறவினர்கள்.

(7154)

லெப். ... (வைத்திலிங்கம் தங்கவேல் - 35ஆம் கிராமம் - மட்டக்களப்பு)

**சிவராஜா** (அழகப்போல் சதானந்தசுந்தரம்- தாமரைக்கேணி - மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த நாட்டுப்பற்றாளரான

**இராஜன்** (முனைக்காடு - மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-சித்தாண்டிப் பகுதியில் ஆலயமொன்றிற்கு முன்னால் வீதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் போடப்பட்டிருந்த குண்டொன்றை அகற்ற முயன்றபோது அது வெடித்ததில் கொல்லப்பட்ட சித்தாண்டி மகாவித்தியாலய மாணவர்களான 2தமிழ்ச் சிறுவர்கள்

யாழ்-தீவகம் பகுதியிலிருந்து குருநகர் நோக்கிசிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலிற் கொல்லப்பட்ட தமிழ் பொதுமகன்

1993ஆம் ஆண்டு மட்டு-கொஸ்கலை முகாமிலிருந்து தம்பிட்டி முகாமிற்கு ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**கப்டன் இராஜேந்திரன் - சேது** (சீனித்தம்பி பாபு - கல்முனை - அம்பாறை)

**ஈழவேந்தன்-தயான்** (கோபாலகிருஸ்ணன் திருஞானமூர்த்தி - தம்பிலுவில்- அம்பாறை)

**மேஜர் தவமோகன்-சதீஸ்** (தம்பிமுத்து தவராஜா - கிண்ணையடி, வாழைச்சேனை - மட்டு)

**2-ம்லெப் குணதாஸ்** (சதாசிவம் ஜெயக்குமார் மயிலம்பாவெளி-மட்டு)

**2 ம் லெப். சேரபாண்டியன்-சிவானந்தன்** (வீரசிங்கம் ரெட்ணசிங்கம்- வந்தாறுமூலை-மட்டு)

**அனுராதன்-அலோசியஸ்** (சிவகுரு சிவகுமார் கல்லடி-உப்போடை - மட்டு)

**ஜெயந்தன்** (கனகசிங்கம் தங்கவடிவேல் - முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

**துசரூபன்** (தருமதாஸ் ஜீவகரன் - கிரான்-மட்டு)

**குருபரன்-கௌதமி** (ஞானப்பிரகாசம்அந்தோனி ஐயங்கேணி - மட்டு)

**தில்லேஸ்வரன்** (சதாசிவம் திருலோகசாந்தன் ஆயித்தியமலை - மட்டு)

**உலகநாதன்-கோஸ்மன்** (சின்னத்தம்பி கிருஷ்ணமூர்த்தி - ஏறாவூர்-மட்டு)

**மோகன்-மோகனகுமார்** (தேவநாயகம் இரவிச்சந்திரன் , முறக்கொட்டாஞ்சேனை -மட்டு)

அம்பாறை மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த-

**பச்சமன்** (விநாயகமூர்த்தி இளங்கோ-குருக்கள்மடம் மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8322)

சிந்தனைக்கு

தொல்லையை விருப்பமானால் நீ வாங்கிக் கொள்
அதை அண்டையிலிருப்போருக்கு இரவல் கொடுக்காதே
-ரட்யார்ட் கிப்ளிங்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-01-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## வினையாக முடியப்போகும் டி. பியின் விளையாட்டு

சிறிலங்கா ஜனாதிபதி டி பி. விஜேதுங்க கிழக்கு மாகாணத்திலும், வடக்கில் வவுனியா நகரிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி முடித்து விடுவதென்பதை ஒரு சாதனையாகவே கருதுகின்றார். ஆனால், இதில், சாதனை என கூறுவதற்கு எதுவுமில்லை. இதேவேளை இதனால் துயரங்களும், வேதனைகளும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களே உள்ளன.

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து, கிழக்கில் வாழும் எவரும் திருப்தி கொண்டிருப்பதாக இல்லை டி பி. விஜேதுங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கிழக்கு மாகாண உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் மற்றும் எதிர்க்கட்சியினரும் இத்தேர்தல் குறித்து வரவேற்புத் தெரிவிக்கவில்லை. இதிலுள்ள சிக்கல்களை டி. பி. விஜேதுங்கவிடம் வற்புறுத்தியும் உள்ளனர்.

கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களும் இத்தேர்தல் குறித்து ஆதரவு தெரிவித்ததாக இல்லை. அத்தோடு இத்தேர்தலில் பங்குபற்றுவது குறித்து தமிழ் குழுக்களுக்கு இடையில் கருத்து வேறுபாடுகளும் உள்ளன. இதில் கூட்டணி, ஈ பி. ஆர். எல். எப். என்பன தேர்தலை தாம் புறக்கணிப்பதாகவும் அறிவித்தும் விட்டன.

ஆனால் இத்தேர்தலை எதுவரினும் நடத்தி முடித்துவிட வேண்டும் என்பதே டி. பி. விஜேதுங்கவின் நோக்கமாகையால், எவர் எதைக் கூறினாலும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவர் இருப்பதாகத் தெரியவில்லை. கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதன் மூலம், பிரச்சினை தீர்ந்துவிட்டது என அவர் எண்ணுவது / உலகிற்குக் காட்ட முற்படுவது வேடிக்கையானது. இராணுவத் தோல்விகளால் ஏற்பட்ட பின்னடைவுகளை இத்தேர்தல் மூலம் மறைத்துவிட அவர் முற்படுகின்றார் என்பதே உண்மையாகும்.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள ஒரு பகுதியில் தேர்தல் நடத்துவதென்பது பெரிய விடயம் ஒன்றல்ல இந்திய இராணுவமும் இவ்வாறான மூன்று தேர்தல்களை வடக்கு - கிழக்கில் முன்னோடியாக நடத்திக் காட்டியுள்ளது. இந்நிலையில் கிழக்கில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளில் 'தேர்தல்' என்ற ஒன்றை சிறிலங்கா அரசு நடத்தி முடித்துவிடக்கூடும்.

ஆனால், இத்தேர்தல் மக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய எந்தளவிற்கு உதவும் என்பதே கேள்விக்குரியதாகும். இதில் முக்கியமானது அப்பிரதேசத்

# இன வெறியின் சுயரூபம் வெளிப்பட்ட தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்!

ஜனவரி பத்தாம் நாள்.

தமிழாராய்ச்சி மாநாட்டுப்படுகொலையின் இருபதாவது ஆண்டு நினைவு நாள்.

தமிழர்கள் தமது நிலத்தில் அமர்ந்திருந்து தமிழைப் பேசவும் - கேட்கவும் சிறிலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாத அரசு சகித்துக் கொள்ளாது என்பதை வெளிப்படையாக உணர்த்திய முதலாவது நிகழ்ச்சி.

இந்தியாவை ஆட்சி செய்த வெள்ளையர்கள் நடத்திய ''ஜாலியன் வாலா பாக்'' படுகொலைகளுக்கு ஒப்பானதாக சிறிலங்காவின் பொலிசார் தமிழர் தாயகத்தில் நடத்திய வெறியாட்டத்தின் காட்சி

இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளில் முதலாவதும், தலையாயதும் அவர்களது இருப்பிற்கும் - பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் இன்மையே என்பதை எவருக்கும் ஐயம் திரிபின்றி எடுத்துரைத்த சம்பவம்.

இத்தனையும் நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சிமாநாட்டின் இறுதிநாளில் இடம்பெற்ற சம்பவங்கள் உணர்த்தும் விடயங்கள் ஆகும்.

தமிழாராய்ச்சிமாநாடு, சிங்கப்பூரின் தலைநகர் கோலாலம்பூரில் முதலாவதாகவும், பிரான்சின் தலைநகர் பாரிசில் இரண்டாவதாகவும், தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் மூன்றாவதாகவும் மாநாடுகளை நடத்தி தமிழ்மொழியின் சிறப்பை - தொன்மையை - பெருமையை - இனிமையை - எளிமையை ஆராய்ந்த அனைத்துலக தமிழாராய்ச்சிமன்றம் நான்காவதாக இலங்கையில் தமிழ் மக்கள் பெருமளவில் வதியும் யாழ்ப்பாணத்தில் மாநாடு நடத்த முடிவு செய்தது. இந்த மாநாடு இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகளை எதிரொலிக்கும் ஓர் அரங்காக இருக்கவில்லை. அரசியல் கட்சிகள் அரசியல், வாதிகள் பங்கு கொண்டு உணர்ச்சியைத் தூண்டும் உரைகளை எழுப்ப களம் அமைத்துக் கொடுக்கவில்லை. சிறிலங்கா அரசுக்கு சவால்விட்டு மோதும் மனநிலையில் மக்கள் கூட்டப்பட வில்லை.

எனினும் தமிழர்கள் தமது தாய்மொழியின் சிறப்பை—பெருமையை உணர்ந்திட இந்த மாநாடு வகை செய்துவிடக் கூடும் என்று அஞ்சிய சிறிலங்கா அரசு ஆரம்பம் முதலே முட்டுக்கட்டை போட்டு வந்தது.

வெளிநாட்டு அறிஞர்கள் கலந்துகொள்வதற்கான நுழைவு அனுமதியை (விசாவை)வழங்குவதில் வெளிநாட்டிலுள்ள சிறிலங்கா தூதுவரகங்கள் இழுத்தடிப்புகள் செய்தன, கலந்துகொள்ளவிருந்த வெளிநாட்டு அறிஞர்கள் வேண்டாத விருந்தினர்களாக நோக்கப்பட்டனர்.

திருமதி சிறிமாவோபண்டாரநாயக்க தலைமையிலான ''மக்கள் ஐக்கிய முன்னணி'' அரசின் ஒத்துழைப்பு கிட்டாததால் மாநாட்டை நடத்துவதில் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் சிரமப்பட நேர்ந்தது

வெளிநாடுகளிலுள்ள தமிழ் அறிஞர்களும் நிறைந்த சபையில் தமிழ்மொழி ஆய்வுக்கு உட்பட்டு இருந்தது. எட்டுத் தினங்கள் தொடர்ந்து நீடித்த மாநாட்டில் ஒன்பதாவது நாளில் வண்ண வண்ண ஊர்திகளோடு ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வலம் புறப்பட்ட போது சில ஊர்திகள் ஊர்வலத்தில் கலந்து கொள்வதனை பொலிசார் ஆட்சேபிக்க அன்று ஏற்பட்ட திடீர் மின்சார விபத்தில் இரண்டு அப்பாவித் தமிழர்கள் அமரர்களாயினர்.

இலங்கையெங்கும் இருந்த தமிழர்களின் பேரார்வத்தைக் கண்டு பூரித்துப் போன தமிழறிஞர்கள் மாநாட்டை மேலும் ஒருநாள் நீடித்தனர்.

ஜனவரி பத்தாம் நாள்

இறுதி நாளின் நிறைவு நிகழ்ச்சிகள் நட

## இன்று 20 ஆண்டு நிறைவு நாள்

தமிழர்களின் இல்லங்களை நாடிச்சென்று பொருளுதவி பெற்றும், தமிழர்களின் உள்ளக் கதவுகளை திறந்து அவர்களது ஆதரவை நாடியும் தமிழாராய்ச்சி மாநாடு நடாத்தப்பட்டது.

வீடுகள் தோறும் பூரண கும்பங்கள் பொலிவுடன் வீற்றிருக்க வீதிகள் தோறும் வாழை சமுகு, தெங்குளால் அலங்கரிக்கப்பட்டு எழிலுடன் காட்சிதர வரவேற்புவளைவுகளும், விழாவுக்கு கட்டியம்கூறும் படாடோபங்களும் வான்வரை உயர்ந்து நிற்க 1974இன் ஜனவரி முதலாம் நாளில் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் நான்காவது மாநாடு யாழ்ப்பாணத்தில ஆரம்பமாகியது-

தமிழ்மொழியின் தொன்மை- பெருமை- சிறப்பு என்பவற்றை எடுத்தியம்பும் நூல் சுவடிகளின் கண்காட்சி ஒருபுறம்; தமிழர்களின் வாழ்க்கையை- பண்பாட்டை சித்திரிக்கும் பொருட்காட்சிகள் மற்றுமொருபுறம்; தமிழர்களின் வாழ்வோடு இணைந்த கவின் கலைகளின் வெளிப்பாடுகள் இன்னுமொரு புறம்; தமிழரல்லாத வெளிநாட்டு அறிஞர்களும்-

ந்து கொண்டிருந்தது வீரசிங்கம் மண்டபத்தின் முன்னே முற்றவெளி எங்கும் அலை கடலெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டம் தமிழ்நாட்டின் பேராசிரியர் நயினாமுகம்மது உரை நிகழ்த்திக் கொண்டிருக்க மெய்மறந்த நிலையில் தமிழர்க்ள் அவரது உரையில் மூழ்கிப் போயிருந்த வேளை,

கோட்டைக்குள்ளிருந்து புறப்பட்டு வந்த சிறிலங்காவின் பொலிசார் சனக்கூட்டத்தை ஊடறுத்து வீதியினால் செல்ல முற்பட்டனர். வேலியே பயிரை மேய்ந்த கதையாக மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொலிசார் கலவரக்காரர்களாயினர். மக்கள் சினம் கொண்டனர். பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் குண்டாந்தடிகளையும் பிரயோகிக்க இறுதிநாள் நிகழ்ச்சிகள் களேபரமாகின. தமிழர்கள் தமது சொந்த நிலத்தின் மீதான தமது ஆளுமையை மீண்டும் நிலை நாட்டும் வரையில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படமுடியாதது என்பது முகத்திலறைந்தாற் போல் எடுத்துரைக்கப்பட்டது.

### கர்நாடக காங்கிரஸ்

## சட்டசபை உறுப்பினர் மேலிடத்துடன் இணக்கம்

(பெங்களூர்)

கர்நாடக மாநில காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள விரிசலைப் போக்குவதில் ஒத்துழைக்க முதல்வர் வீரப்ப மொய்லிக்கு ஆதரவான மற்றும் அதிருப்தியுற்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் இணக்கம் தெரிவித்து இருக்கின்றனர்.

கட்சி மேலிடத்தின் கட்ட

கும் மத்திய பார்வையாளர் டாக்டர் ஜகன்னாத் மிஸ்ரா கட்சி மேலிடத்திற்கு இன்று தமது அறிக்கையை கையளிக்க இருப்பதாகக் கூறியுள்ளார். மாநில கட்சித் தலைமையில் மாற்றம், சட்டப் பேரவையின் மையப் பகுதியில் காங்கிரஸ் உறுப்பினர்கள் நடத்தியதர்ணா, வீரப்ப மொய்லி அமைச்சரவையிலி

## கராச்சியில் குண்டுவெடிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரத்திலுள்ள நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் பத்துப்பேர் வரை காயமடைந்துள்ளனர். சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இக்குண்டு வெடித்ததில் நீதிபதி ஒருவர், பொலிஸ்காரர் ஒருவர் உட்பட சுமார் பத்துப்பேர் வரை காயமடைந்துள்ளனர். இதனால் நீதிமன்ற வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

## தென்ஆசியாவில் அணுயுத்தம் ஏற்படும் சாத்தியம் உண்டு

-பாக். வெளியுறவு அமைச்சர்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடனான பிரதேசப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் தெற்கு ஆசியாவில் அணுவாயுத யுத்தம் ஏற்படும் சாத்தியம் இருப்பதாக பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் ஜனாப் ஆசிப் அகமட் அலி கூறியுள்ளார்.

முன்னாள் சோவியத் குடியரசான உஸ்பெஸ்கிஸ்தானின் செய்தியாளர்கள் சில

வுடன் பாகிஸ்தான் கொண்டுள்ள பிரதேசப் பிரச்சினை சமாதான பூர்வமாக தீர்க்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் யுத்தம் ஏற்படும் சாத்தியம் உண்டு.

அயல்நாடான ஆப்கானிஸ்தானில் சண்டையில் ஈடுபட்டுள்ள போட்டிக் குழுக்களுக்கு இடையே நிரந்தர யுத்த நிறுத்தத்தை கொண்டுவர உஸ்பெஸ்கிஸ்தானுடன் பாகிஸ்தான் இணைந்து

விக்குரியதாகும். இதில் முக்கியமானது அப்பிரதேசத்தில் வாழ்ந்த பெரும்பான்மை மக்கள் அப்பகுதியில் இருந்து விரட்டப்பட்டுள்ளனர். மற்றையது இத்தேர்தல், ஜனநாயக ரீதியானதாக மக்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவும், ஓர் அரசியற்கட்சியை ஆதரிக்கவும் எந்தளவிற்கு வாய்ப்புக்களை வழங்கும் என்பது ஆகும்.

இத்தேர்தல் எவ்வாறு நடைபெறும் என்பதற்கு இப்பொழுதே கட்டியம் கூறக் கூடிய சம்பவங்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன, எடுத்துக் காட்டாக, திருமலை மாவட்டத்தில், வெருகல் பகுதியில், வேட்புமனு தாக்கல் செய்ய மறுத்த 10 தமிழர்களை இராணுவம் கைது செய்துள்ளமையைக் கூறலாம்.

அதாவது, தேர்தல் வேட்பாளர்களைத் தேடும் பணியில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டிருப்பதில் இருந்தே நடைபெறப்போகும் தேர்தலின் தன்மையைப்புரிந்து கொள்ளமுடியும், அடுத்த கட்டமாக கைது செய்யப்படுபவர்கள் கொலை மிரட்டலுக்கு உள்ளாக்கப்பட்டு தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்படினும் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஏனைய கட்சி மாகாணசபைஉறுப்பினர்களையே கடத்தி வைத்துக் கொண்டு பேரம் பேசும் அரசிற்கு இது பெரியதொன்றல்ல.

இதேவேளை வேட்பாளர்களை நிறுத்துவதற்கே துப்பாக்கி முனைகளைப் பாவிக்கும் அரசாங்கம் தேர்தல் வாக்களிப்பிலும் இதனை பயன்படுத்த தயங்கப் போவதில்லை. அத்தோடு, வாக்குகளில் பதிவானவை போக ஏனையவற்றை இராணுவத்தினரே வாக்காளர்களாக மாறி வாக்களிக்கவும் கூடும். 1981இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில் இருந்து இராணுவம் பல தேர்தல்களில் வாக்காளர்களாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை சகலரும் அறிந்ததொன்றே.

இவ்வாறான ஒரு நிலையில், கிழக்கு மாகாண தேர்தல் என்ற ரீதியில், இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதியில் மட்டும் ஒரு தேர்தல் நடத்தி முடிக்கப்படலாம். ஆனால், இது பிரச்சினையைத் தீர்க்காது. மாறாக வன்முறைகளையே தூண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட தயாரான வேட்பாளர் ஒருவர் ஏற்கனவே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்நிலையில், டி. பி. விஜேதுங்க கிழக்கு மக்களை உள்ளூராட்சித் தேர்தல் எனக் கூறி கிழக்கு மாகாண மக்களின் உயிருடன் விளையாடுகின்றார் என்பதே உண்மையாகும். டி. பி. விஜேதுங்கவின் இந்நிலைப்பாடு ஒரு போதும் விளையாட்டாக முடியாது வினையாகவே முடியும் இனங்களுக்கு இடையில் மேலும் வன்முறையைத் தூண்டவே உதவும்.

கட்சி மேலிடத்தின் கட்டளையை கடைப்பிடிப்பதற்கும் அதிருப்தியுற்ற மற்றும் விசுவாசம் தெரிவிக்கும் உறுப்பினர்களும் கூறியுள்ளனர். இதனிடையே கட்சிநிலைவரத்தை மதிப்பீடு செய்வதற்காக பெங்களூர் சென்றிருக்கும் மொய்லி அமைச்சரவையிலிருந்து எட்டுப்பேர் பதவி விலகியது உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் சட்ட மன்ற உறுப்பினர்களுடன் டாக்டர் ஜகன்னாத் மிஸ்ரா ஆலோசனை நடத்தியுள்ளார்.

## ஆப்கானில் சட்டம், ஒழுங்கு சீரழிந்து போயுள்ளது

(காபூல்)

இராஜ்யத் துறையினரை ஆயுதப்பாதுகாப்புடன் வெளியே அழைத்துச் செல்ல உதவுமாறு காபூலில்சண்டையிடும் போட்டிக்குழுக்களுக்கு ஐ. நா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்காக ஆப்கான்அதிபர் ரபானியுடனும் பிரதமர் சேக் மத்தியாருடனும் தொடர்பு கொள்ளப் பட்டிருப்பதாக ஐ. நா வட்டாரங்கள் கூறியுள்ளன.

காபூலில் வசிப்போரை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறுவதாகவும் ஆகையால் ஆப்கான் நிலைமையில் சட்டம் ஒழுங்கு நிலைமை தாறுமாறாகஇருப்பதாகவும் ஜப்பானிய செய்தி அமைப்பு கூறியுள்ளது.

## குண்டு வீச்சை நிறுத்த சேபியரிடம் கோரிக்கை

(சரயேவோ)

தொடர்ச்சியாக சரயேவோ நகரம் மீது குண்டு வீசுவதை நிறுத்தி சேர்பியர்கள் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்று அமெரிக்காவும், பிரிட்டனும் கோரிக்கை விடுத்துள்ளன.

பெல்கிரேட்டில் இருக்கும், அமெரிக்க பிரிட்டன் தூதுவரகங்கள் இரண்டும் குண்டு வீச்சு பயங்கரமானதுஎனவும் சேர்பிய ஜனாதிபதிக்கு இரு தூதுவர்களும் தெரிவித்திருப்பதாக ஐ. நா. விலுள்ள பிரிட்டன் தூதுவர் கூறியுள்ளார்.

## அரசியல்வாதிகள் தேர்தலை இலக்காக்கக் கூடாது

– பி. வி. நரசிம்மராவ்

தேர்தலையே இலக்காகக் கொள்ளாமல் அரசியல் வாதிகள் அபிவிருத்திப் பணிகளில் நாட்டம் காட்ட வேண்டுமென இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கேட்டுக் கொண்டார்.

கேரள மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவர் கேரள முதல்வர் கருணாகரனை சிறப்பிக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள சப்தாதி மந்திரை திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில், தடைகள் ஏற்பட்டாலும் சமயசார்பற்ற ஜனநாயகத்தை அடைய நாடு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பலவாகனங்களும் சேதமடைந்துள்ளன.

## போர்நிறுத்தத்தை தொடர ஆப்கான் குழுக்கள் இணக்கம்

(காபூல்)

பாகிஸ்தானும் இந்தியாவும் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஆப்கானிஸ்தானில் போரில் ஈடுபட்டுள்ள போட்டிக்குழுக்கள் யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்க இணங்கியுள்ளன. முன்னர் அமுலில் இருந்த 24மணிநேர யுத்த நிறுத்த காலத்தில் ராஜதந்திரிகள், மற்றும் ஆயிரக்கணக்கான மக்கள் காபூலில் இருந்து வெளியேறினர்.

ஒருவாரம் தொடர்ந்து நீடித்த போரையடுத்து இந்த யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஹசரத்பால் மசூதியிலிருந்து

## இந்தியப்படை அகலும்வரை தொழுகை நடைபெறாது

காஷ்மீர் ஹசரத்பால்மசூதி நிர்வாகிகள், அங்கிருந்து இந்தியப்படை அகலும் வரை தொழுகை நடைபெறாது என அறிவித்துள்ளனர் இதனால் இன்று நடைபெறும் முஸ்லிம்களின் பெருவிழா தொடர்பான தொழுகை இம் மசூதியில் நடைபெறாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹசரத்பால் முற்றுகையின் பின்னர் இதுவரை அங்கு தொழுகை ஏதும் நடைபெறவில்லை.

### மலேரியா

குருதி கலங்களினுள் நுழைவதற்கு முன் அவற்றை இம் மருந்து ஒழித்துக்கட்டும்.

இத் தடுப்பு மருந்திலுள்ள ஒவ்வொரு நுண்ணுயிர் கொல்லியும் தனித்தனியே பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது. இம் மருந்து ஏற்கனவே சிறிதளவு பாதிக்கப்பட்ட மலேரியா நோயாளிகளில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது. விரிவான அடிப்படையில் வெளிக்கள பரிசோதனைகள் இவ்வருடம் பப்புவா நியூகினி நாட்டிலுள்ள வயது வந்த நோயாளிகள் மத்தியில் பரிசோதிக்கப்படும். அதன் பின்பே இது சிறுபிள்ளைகளுக்கு சிபார்சு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

னின் செய்தியாளர்கள் சிலருக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில்: இந்தியா

செயற்படும் எனவும் அவர் மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## பெல்ஜியத்தில் நேட்டோ மாநாடு

(பிரசல்ஸ்)

பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் இன்று நடைபெறவுள்ள நேட்டோ உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் இந்நகர் வந்துள்ளார். ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர் கிளின்ரனின் முதல் ஐரோப்பிய விஜயம் இதுவாகும்.

## 35 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸின் மொனிட்டோ மற்றும் அல்பே எனும் இரு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும், நிலச்சரிவினாலும் 35 பேர் பலியாகினர். வெள்ளப்பெருக்கில் சிக்கியவர்களை இராணுவ ஹெலிகப்டர்கள் மீட்டு வருகின்றன.

## அவுஸ்திரேலிய காட்டுத்தீ கட்டுப்பாட்டில் வந்தது

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத்தீ வேகம் குறைந்த நிலையில் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் சிட்னி நகரைச்சுற்றி தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது. இதனால் ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளில்இருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

இத்தீயினால் எழும் புகை மண்டலம் சிட்னி நகரில் கவிவதால் பெரும் பாதிப்பு ஏற்படலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

### காயமடைந்த

ந்து வந்து குருநகரில் சகோதரருடன் வசித்து வந்த செல்வி குருசுப்பிள்ளை அருள்நாயகி (வயது 42) என்னும் திருமணமாகாத பெண்ணே நேற்று பலியானவராவார்.

இவருடன் அன்றைய குண்டுவீச்சில் பலியானவர்களின் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது. குண்டு வீச்சு கடந்த நவம்பர் மாதம் 13ஆம் திகதி நடத்தப்பட்டது தெரிந்ததே. (21)

# தபால் பார்சல் குண்டு வெடிப்பில் அ. தி. மு. க. பிரமுகர் கையிழப்பு

(குமரிமுனை)

தபாலில் வந்த பார்சலை பிரித்தபோது அதில் இருந்த குண்டு வெடித்ததால் அ. தி. மு. க. பிரமுகரின் கைகள் துண்டிக்கப்பட்டன.

குமரிமுனை பக்கமுள்ள சின்னமுட்டத்தைச் சேர்ந்த அ. தி. மு. க. செயலாளரான லாரன்ஸ் (வயது 35) என்பவரே மேற்படி சம்பவத்தில் தனது இருகைகளையும் இழந்தவராவார்.

வெளிநாட்டிலுள்ளஇவரது சகோதரர் பெயரால் அனுப்பப்பட்ட மேற்படி பார்சலை லாரன்ஸ் பிரித்தபோதே அதற்குள் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்துள்ளது.

இதன்போது அவரது இரு கைகளும் முற்றிலும் சிதைந்ததாகவும் முகமும் பலத்த சேதமடைந்ததாகவும் அவர் உடன் மயக்கமுற்று வீழ்ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தோண்டிய புதைகுழிக்குள் மீண்டும் எலும்புக்கூடுகள்

(கொழும்பு)

முன்னர் தோண்டப்பட்ட புதை குழிகள் மீண்டும் இரகசியமாக தோண்டப்பட்டு வேறொரு குழியிலிருந்த எலும்புக்கூடுகள் அதில் போடப்பட்டு மூடப்பட்டுள்ளதாக சட்டத்தரணி ஒருவர் எம்பிலிப்பிட்டிய நீதிபதியிடம் முறையிட்டுள்ளார், எனவே மீண்டும் அப் புதை குழிகள் தோண்டப்பட வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த சில தினங்களாக பொலிசார் இப் பகுதிக்குப் பாதுகாப்பு வழங்கியபோதிலும் இவ்வாறான சம்பவம் நடைபெற்றுள்ளது என அவர் தெரிவித்ததை அடுத்து மீண்டும் அப் புதை குழிகளைத் தோண்டுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு தோண்டப்பட்டபோது எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

சிலவற்றின் முகம் துணியால் கட்டப்பட்டிருந்ததாகவும், சாரங்கள், சேட்போன்றவை காணப்பட்டதாகவும் சில எலும்புக் கூடுகளில் கைகள் கட்டப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது,

இவ் எலும்புக்கூடுகள் 'சீல்' வைக்கப்பட்டு எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இவ் எலும்புக்கூடுகளை அடையாளம் காணுவதற்கு நீதிமன்றத்திற்கு வருமாறு பெற்றோரிடம் நீதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

## புலமைப்பரிசில் பெற்ற மாணவருக்கு கௌரவம்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் மாணவர்களைப் பாராட்டி அமரர் திருமதி கமலாதேவிகனகசபை (வாரிவளவு) ஞாபகார்த்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இவை இன்று திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு வட்டுக்கோட்டை (யாழ்ரன் கல்லூரியிலும் எதிர்வரும் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி. (யாழ்ப்பாணம் ஐடியல் கல்வி நிலையத்திலும்) நடைபெறும்விழாவில் வைத்து வழங்கப்படும் என காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையினர் அறிவித்துள்ளனர்.

### மேலும்

அறிவுறுத்தியிருந்தபோதிலும் கடும் வாதப் பிரதிவாதங்களின்பின் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இப் பத்திரிகையாளர்களில்உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தியாளர்கள் அங்கம் வகித்தனர்.

# 3200 மெ. தொன் மாவுடன் மாகோ வந்தடைந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்குத் தேவையான மாவின் ஒரு தொகுதியைஏற்றிக்கொண்டு மாகோ கப்பல் நேற்று பருத்தித்துறை வந்தடைந்தது. 3200 மெற்றிக் தொன் மாவுடன் வந்து சேர்ந்த இக் கப்பலிலிருந்து மா இறக்கும் பணி உடன் ஆரம்பமாகியது. இதன் மூலம் யாழ்மாவட்டத்தில் மாவிற்கு நிலவும் தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இக்கப்பலில் 75 பயணிகளும் வந்து சேர்ந்தனர். (நி, க)

### மங்களின்

தனது தரப்பு நியாயங்களை எடுத்துக்கூறினார் அதேபோல் சம்பந்தப்பட்ட மத்திய மாகாணசபை உறுப்பினர்கள் எட்டுப்பேரில் 6 பேரை பொதுச்செயலாளர் அழைத்து வந்து அவர்கள் மூலமாகவே அவர்களது பிரச்சினையைக் கூற வைத்தார். ஆனால் நான் தேசிய சபையின் தீர்மானத்தைக் கூறி உடனடியாக அல்லது சில நாட்கள் சென்றாலும், பரவாயில்லை. நன்றாக யோசித்து உங்களது இராஜினாமாக்கடிதத்தைத் தாருங்கள் என்றேன். அதன் பின்பு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது குறித்து மீண்டும் தேசியசபையைக்கூட்டி அதன் முடிவை அறிவிப்போம் என்றார்.

### மாங்குளம்

குளம், பனிக்கங்குளம், கனகராயன்குளம், ஒலுமடு, தச்சடம்பன்குளம், கரிபட்ட முறிப்பு, 9-ம்கட்டை, புதுக்குளம், வன்னிவேளாங்குளம், மூன்றுமுறிப்பு, மல்லாவி, வவுனிக்குளம், பாண்டியன் குளம், துணுக்காய், நட்டாங்கண்டல், பனங்காமம் ஆகிய கிராமங்களில் வாழும்மக்கள் தமதுமுறைப்பாடுகளை பதிவு செய்ய வசதியளிக்கப்பட்டுள்ளது.

### கட்சி

கொள்ளுப்பிட்டி; இ.தொ.கா காரியாலயத்தை உடைத்து ஆவணங்கள் திருடிச் சென்றுள்ளனர் என பொலிஸில் புகார் செய்துள்ளீர்கள் திருடியவர்கள் யார்? என நிருபர்கள் செல்லச்சாமியைப் பார்த்துக் கேட்டபோது, 'அது பொலிஸாருக்குத்தான் தெரியும்' என அவர் பதிலளித்தார்.

எமது கட்சியின் ஐக்கியம் முக்கியம். அதை எவரும் சீர்குலைக்காதீர்கள் என்று செல்லச்சாமி நிருபர்களைப் பார்த்துக் கூறியபோது' ஐக்கியத்தை விட ஒழுக்கம் தான் முக்கியம் என தொண்டமான் தெரிவித்தார்.

கண்டி மாவட்ட எம். பி. காதர் இப்பிரச்சினையில் எப்படிச் சம்பந்தப்பட்டார்? யார் சம்பந்தப்படுத்தியது? என நிருபர்கள் கேட்டபோது காதர் மட்டுமல்ல; காமினி திசநாயக்காவும்சம்பந்தப்பட்டுள்ளாரே அது எப்படி? என அமைச்சர் செல்லச்சாமி கேட்டார்.

இச்செய்தியாளர் மாநாடு ஒரு கொந்தளிப்பான நிலையிலேயே நிறைவெய்தியது. தொண்டமானுக்கும், செல்லச்சாமிக்கும் இடையிலான தகராறு தீராத நிலையே காணப்படுவதாக அறியவருகிறது.

### காஞ்சி

வித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு காஞ்சிப் பெரிய சுவாமிகளது சமாதியடைவு குறித்து யாழ். மாவட்ட இந்துஇளைஞர் பேரவை விடுத்த அனுதாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மேற்படி பேரவையின் பொதுச் செயலாளர் திரு. ப. சிவலோகநாதன் விடுத்துள்ள அவ் அறிக்கையில் ''கால சூழ் நிலை காரணமாக யாம் சுவாமிகளது திருவுடலை

## பனை அபிவிருத்திச்சபை
## சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர் பதவி

இன்று நடைபெறவிருந்த மேற்படி பதவிக்கான நேர்முகப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. மறு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதில் பொதுமுகாமையாளர்
பனை அபிவிருத்திச்சபை.

(சி-8323)

## விற்பனைக்கு வெளிவந்துவிட்டது

எமது அடுத்த தொகுதி புத்தகங்கள்
விற்பனைக்கு வந்துவிட்டன

நாடவேண்டிய இடம்:

## பிரார்த்தனை

08.01. 1994 சனிக்கிழமை மகாசமாதி அடைந்த மாமுனி காஞ்சிப் பெரியவர் திரு. கயேந்திர சங்கராச்சாரியார் சுவாமிகளிற்கு எங்களது இதய பூர்வமான பிரார்த்தனையை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம்
சிவன் தேவஸ்தானம்

87, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (7186)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 09- 01 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 161

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

27-1375, 27-0991, 22-3938, 27-5197, 42-738
22-4895, 41-4194, 24-4153, 41-9327, 24-9856
24 8391, 28-0882, 28-5484, 27-9327, 26-3937
26-3390, 24-4367, 42-5556, 26-3528, 26-3146

## 61-ம் நாள் நினைவலைகள்



தாயின் மடியில்:
06-06-1970

தாயக மண்ணில்:
11-11-1993

### 2-ம் லெப். ஈழப்பிரியா
### (மதிவதனி நவரட்ணம்)

கொழும்புத்துறை

பூநகரிப் போரிலே மண்ணிற்கு
விதையாகி எட்டுத்திங்கள் ஆனதம்மா
இன்னும் தேடுகின்றோம் முடியவில்லை-உன்
மழலைமொழி கேட்கின்றது
தினம் தினம் எம் காதுகளில்
உருவமாக எம்முன் நீ யில்லை
உன் நினைவால் துடிக்கின்றோம்.

10-01-1994 (இன்று) திங்களன்று எமது இல்லத்தில் நடைபெறும் 61-ம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
நவரட்ணம் குடும்பத்தினர்

(7184)

## மரண அறிவித்தல்கள்
### தம்பிமுத்து சோதிமுத்து

வட்டு வடக்கு - சித்தன்கேணியைச் சேர்ந்த தம்பிமுத்து சோதிமுத்து 09-01-1994 நேற்று காலமானார். அன்னார் விநாசித்தம்பி தம்பிமுத்துவின் மனைவியும் காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை (முன்னாள் உணவுக் களஞ்சியப் பொறுப்பாளர்), ஆனந்தராஜா (தொழில் நுடபவியலாளர்-மின்சாரப் பகுதி மாநகர சபை, யாழ்ப்பாணம்), கிருஷ்ணராஜா (இந்தியா), குலசேகரம்பிள்ளை (பாரெயின்), காலஞ்சென்ற செல்வராஜா, திருமதி யோகேஸ்வரி, திருமதி வள்ளியம்மை, திருமதி இராஜேஸ்வரி ஆகியோரின் தாயாரும், மனோன்மணி, சரஸ்வதி, செல்வநாயகி, புஸ்பராணி, காலஞ்சென்ற சோமசுந்தரம், காலஞ்சென்ற இரகுநாதன் மா. அருணாசலம் ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் (10-01-94 ஆம் திகதி) இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.
(7187)

தகவல்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

அசையர் கணபதிநாதன் J.P

தமிழ்த்தாய் புத்தகசாலை
191, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-8325)

26-3390, 24-4367, 42-5556, 26-3528, 26-3146
24-8429, 40-770, 24-6439, 26-0852.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

43-1062, 26-5576, 26-2941, 42-2397, 24-5721
28-7978, 26-2668, 27-9033, 24-5964, 28-6546
24-3063, 26-9201, 26-5113, 41-9487, 26-1791
28-2829, 26-0525, 24-7672.

சேரன் பல்பொருள் வாணிபம்
புத்தாண்டில்
தென்மராட்சி மக்களுக்கோர் நற்செய்தி!
நியாய விலையில்
தரம் நிறைந்த பொருட்கள்!
உங்களுக்குத் தேவையான சகல பொருட்களும்
ஒரே இடத்தில்
இன்று காலை 10 மணிக்கு
மங்களமான ஆரம்பம்
சேரன் பல்பொருள் வாணிபம்
கண்டி வீதி,
கொடிகாமம்.
(சி-8326)

நிலை காரணமாக யாம் சுவாமிகளது திருவுடலை நேரில்சென்று சமாதி நிகழ்வுகளில் தரிசனம் பெறமுடியாவிடினும் ஈழவள நாட்டிலுள்ள ஆலயங்கள், இந்து அமைப்புகள், இந்து இளைஞர் மன்றங்கள் சிறப்பாக ஒவ்வோர் வீட்டிலும் பிரார்த்தனைகளை மேற்கொண்டு சுவாமிகளது இறைபணியை நினைவுகூருவதுடன் காஞ்சி காமகோடி பீடத்தின் இறையருட்சியின்கீழ் உலகளாவிய மனிதகுலமும் அனைத்து ஜீவராசிகளும் குறிப்பாக நமது ஈழவள நாட்டு மக்கள் படும் துன்பதுயரங்களும் நீங்கி அமைதியும் சமாதானமும் நல்வாழ்வும் சுபீட்சமும் பெற பிரார்த்திப்போமாக'' எனவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## போராட்டத்தை

அதைத் தக்கவைத்துக் கொள்ளமுடியாமல் பின்வாங்கவேண்டி ஏற்பட்டது. ஏனெனில், வெற்றிக்குத் தேவையான இரண்டாவது அம்சமான தக்கவைத்துக் கொள்ளல் என்ற விஷயம் இராணுவத்திற்கு சாத்தியமாக இருக்கவில்லை.

ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றுவதிலும் பார்க்க கைப்பற்றிய பிரதேசத்தை தக்கவைத்துக்கொள்வது, சில சந்தர்ப்பங்களில் கடினமாகப் போகலாம்.

கிளாலி தாக்குதல் நடவடிக்கை தொடர்பாக இலங்கைவாழ் சமூகம் ஒன்றின், பொறுப்புள்ள பேச்சாளர் ஒருவர் இது இராணுவம் எடுத்த முடிவு என்றும், இது தனக்கு ஏமாற்றத்தை தருவதாகவும் கூறுகின்றார். இவர் இராணுவ கண்ணோட்டத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது என்றார்.

## ஆசையர் கணபதிநாதன் J.P

(சித்த ஆயுர்வேத வைத்தியர், ஓய்வு பெற்ற அதிபர்) வளலாயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட, சமாதான நீதவானும், சித்த ஆயுர்வேத வைத்தியரும், ஓய்வு பெற்ற அதிபருமாகிய ஆசையர் கணபதிநாதன் (1994-01-09) நேற்று சிவபதமடைந்து விட்டார். இவர், வளலாய் சித்த வைத்தியர் கணபதி ஆசையர், தெய்வயானை ஆகியோரின் அன்பு மகனும், நவமணியின் அன்புக் கணவனும், காலஞ்சென்ற சீனிவாசகம் (தபாலதிபர்), நாயகம், அம்மிணிப்பிள்ளை, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பொன்னையா, காலஞ்சென்ற இராசையா (அதிபர்), இரவீந்திரநாதன், பானுமதி, காலஞ்சென்ற நடராசா, நல்லையா ஆகியோரின் மைத்துனரும், மங்கையர்க்கரசி ஓய்வு பெற்ற ஆசிரியை,) தேவநாயகி (ஆசிரியை யா/ மத்திய கல்லூரி ) திலகநாயகி (ஜேர்மனி), புனிதவதி (ஆசிரியை யா/ புனித மரியாள் வித்தியாலயம்), ஜோதீஸ்வரி (ஆசிரியை யா/ புனித மரியாள் வித்தியாலயம்), காலஞ்சென்ற சபாநாதன், இரவீந்திரநாதன் (ஜேர்மனி), ஜெயநாதன் (இலங்கை வங்கி 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்), மோகனநாதன் (பொறியியலாளர், ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகரத்தினம் (பிரதேச வனபரிபாலன அலுவலர் வவுனியா), சிறீகாந்தன் (பனை அபிவிருத்திச் சபை யாழ்ப்பாணம்), தவராசா (ஜேர்மனி), குமாரசிவநாதன் (சீமெந்துக் கூட்டுத்தாபனம்), பத்மநாதன் (இலங்கை வங்கி 2ஆம் கிளை யாழ்ப்பாணம்), பவானி (ஜேர்மனி), சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபோஜினி, றாஜினி, சஞ்சீவன், கோகுலன், சர்மிலா, சோபனா, கீர்த்தனா, சிவதர்சினி, ஜானகி, அபிரா, கௌசிகன், நிரூபா, றொசாந்தி, யாழினி, நிஜாந்தினி, ஜெனனி, கஜானன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத்தெரு 177ஆம் இலக்கத்திலுள்ள அவரின் இல்லத்திலிருந்து, தகனக் கிரியைக்காக 1994-01-10ஆந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4-00 மணிக்கு யாழ். கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஆ. க. ஜெயநாதன்

(7188)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது